முருகப்பெருமான் துணை

**மகான் பெரியாழ்வார் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.04.2023**, சனிக்கிழமை

1. தவமோடு தருமபலம் கூட்டி
தரணியில் ஞானம் அருளுகின்ற
அவதார ஆறுமுக அரங்கனே
அகிலமதில் உன் பெருமை கூறி
2. கூறியே சுபகிருது சேல் திங்கள்
குறைவிலா இருபானை திகதி காரிவாரம்
(சுபகிருது வருடம் பங்குனி மாதம் 25 ம் நாள், 08.04.2023, சனிக்கிழமை)
தெரிவிப்பேன் அனுகூல ஆசி
தேசிகனுக்கு பெரியாழ்வார் யானும்
3. யானும் உலகநலமுற உரைப்பேன்
உயிர்கொலை நீக்கி வாழுகின்ற
ஞானமதை அருளும் அரங்கன்
ஞானவழியில் நம்பிக்கை வைத்துவர
4. வருகவே தெளிவு திடமோடு
வருமுலகில் தேற்றம்பல கண்டு
பேருலக மக்கள் அனைவரும்
புகலுவேன் ஞானவான்களாவர்
5. ஆவரே நல்வாழ்வு சிறப்புடன்
ஆன்மீக ஞானத் தொடர்புடன்
அவனிதனில் அற்புதம் நடத்தும்
ஆன்றோர் சான்றோர்களாக மாறுவர்
6. மாறவே படிப்படியான தேற்றம்
மக்களிடை இலகுவாகக் கண்டு
கூறவே ஆறுமுகனார் வழிபாடு
குறைவிலா எங்கும் பரவி
7. பரவியே முருகப்பெருமான் வெளிப்பட
பண்பான ஞான வாழ்வாக
தரணியோர் எல்லாம் அடைந்து
தவவாழ்வு கண்டு சிறப்பார்

8. சிறக்கவே அரங்கன் வழி
சித்தி கண்டுள்ள மக்களாக
பரதம் எங்கிலும் தேறி
பாடிடுவேன் ஞானிகள் ஆட்சி

9. ஆட்சி ஞான ஆட்சியாக
அகிலமெல்லாம் ஆறுமுகனார்
ஆட்சியாக மாற்றம் காணும்
அரங்கன் வழிகாட்டல் மூலம்

10. மூலமாக சகல மாற்றமும்
முழுமை ஞானமாகக் கண்டு
காலம் வெல்லும் ஞானிகள்
கருணைபட வந்திறங்கி

11. இறங்கியே ஞானசித்தர் காலமாக
எங்கும் மாற்றம் நிகழும்
வரங்கள் கூடி உலகமாற்றமாக
வையகம் கண்டு சிறக்கும்

அனுகூல ஆசி முற்றே

—சுபம்—